# உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒரு ஆண்டு காலத்திற்குள் திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய ரூபா 34,521,003 தொகையான கடன் திருப்பிச் செலுத்தல்கள் இ.க.நி 3 இன்படி நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இ.க.நி 16 இன்படி பணிக்கொடை சூத்திர முறை பயன்படுத்தி ஊழியத்திற்கு பிந்திய நலன்புரி செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட வேண்டுகைக்கமைய பணிக்கொடைப் பொறுப்பு கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) இ.க.நி 14 இன் 5 மற்றும் 46 ஆம் பந்தியின் படி தற்போதைய வரிப்பொறுப்பு கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 598,603 தொகையான உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பதவியணியினர் பயிற்சிச் செலவினம் வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்வதற்குப் பதிலாக தொழில் ஆரம்பிப்புச் செலவினமாகக் கருதி நிலையான சொத்தாக கணக்கிடப்பட்டிருந்தது. ஆகவே, 2011 ஆம் ஆண்டிற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் நிதிசார் விளைவுகள் (மிகைகள்) அதே தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 15 மடிக் கணனிகள் மற்றும் ஏனைய உபபாகங்களின் கொள்வனவிற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,847,449 ஆன தொகை கணனி உபகரணங்களில்

ஒன்றாக கணக்கிடுவதற்குப் பதிலாக நவீனமயமாக்கல் செலவினமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. ஆகவே நவீனமயமாக்கல் செலவினம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிறுவனம் செயற்படுகின்ற வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தின் பகுதியாக்கல் வேலைக்காக ஏற்பட்டிருந்த ரூபா 682,690 ஆன தொகை வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்வதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

நிதிக்கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி அதிகாரசபைகளிடமிருந்து (எல்ஜீஐஜபீ) பெறவேண்டிய வட்டி மீதியை ரூபா 76,131,812 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களிற்கு இணைக்கப்பட்ட பட்டோலையின்படி, இது ரூபா 83,857,352 ஆக இருந்தது. எனினும், ரூபா 7,725,540 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தால் வழங்கப்பட்டிருந்த ரூபா 535,502,937 கூட்டுமொத்தத் தொகையான கடன் மீதிகள் கடன்பட்டோராக நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| **உள்ளூராட்சி அதிகாரசபை** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதி** |
|---|---|
| | **ரூபா** |
| மா நகர சபைகள் | 99,229,915 |
| நகர சபைகள் | 92,845,901 |
| பிரதேச சபைகள் | 343,427,121 |
| மொத்தம் | 535,502,937 |

நீண்ட காலமாக நிலுவையாக இருக்கின்ற ரூபா 22,389,336 கூட்டுமொத்தத் தொகையான மீதியாக நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற அறவிடமுடியாக் கடன் மீதிகள் மற்றும் ஐயக்கடன்களுக்காக போதிய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 30 ஆண்டுகளிற்கு மேலாக 22 பிரதேச சபைகளிடமிருந்து பெறவேண்டியதாக ரூபா 5,826,916 தொகையான கடன்கள் இருந்தனவென அவதானிக்கப்பட்டது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்த ரூபா 567,892,273 ஆன மொத்த உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிய கடன்பட்டோரில் ரூபா 207,250,165 அல்லது 36.49 % மாத்திரமே 2012 யூன் 30 வரைகூட உரிய வாடிக்கையாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் காட்டப்பட்ட ரூபா 1,877,436,728 கூட்டுமொத்தத் தொகையாக நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டத்தின் மொத்தக் கடன்பட்டோர் மீதியில் ரூபா 552,657,018 அல்லது 29.43 % மாத்திரமே 2012 யூன் 30 வரையிலும் உரிய வாடிக்கையாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான ஆவணரீதியான சான்றுகளின்மை

பின்வரும் சான்றுகள் கணக்காய்விறற்காக கிடைத்திருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| (i) | செயற்பாடற்ற கடன் வட்டி | | |
| | உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் | 16,534,087.50 | |
| | பல்லாண்டுப் பயிர் அபிவிருத்திச் செயற்திட்டம் | 22,733,319.45 | |
| | நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டம் | 367,966,712.54 | உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (ii) | பெறவேண்டிய நடைமுறையல்லா வட்டி | | |
| | யூடிஎல்ஐஎச்பி | 20,745,940.86 | |
| | பிசீடிபி | 8,461,973.78 | |

## 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஎஸ்/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | |
| (i) 2 ஆம் பந்தி | நிதியத்திற்கு சொந்தமான ரூபா 5,320,454 பெறுமதியான கணனிகளிற்காக சுற்றறிக்கையின் படி புறம்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4 ஆம் பந்தி | கணனிகளிற்குப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர்கள் கணனி சொத்துப் பதிவேட்டில் காணப்படுகின்ற தகவல்கள் மீது கணனி தரவு அடிப்படையாகக் கொண்டு கோவையொன்றைப் பேணவேண்டிய போதிலும் அவ்வாறு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் | |
| நி.பி 507(2) | இருக்கின்ற ஒவ்வொரு சொத்துக்களும் திசெம்பர் 31 இல் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் சொத்துக்களின் நிலைமை குறிப்பிட வேண்டும். இதன்படி தயாரிக்கப்பட்ட மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிலையான சொத்துக் கூற்று வருடாந்த கணக்குகளுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.2.7 அனுமதியளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டத்தின் ஆணையாளர் சபையின் சிபார்சுகளின்படி, காலத்திற்கு காலம் பண அளிப்புச் செய்யப்பட்ட தொகைகளில் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி வரை வட்டியில் மூலதனமாக்கல் செய்யப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் வட்டி மூலதனமாக்கலிற்கான நிபந்தனை உள்ளடக்காமை காரணமாக உடன்படிக்கையில் காட்டப்பட்ட கடன் தொகைக்கும் கணக்குகளில் காட்டப்பட்ட

கடன் தொகைக்கும் இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டன. எனினும் கடன் பெறுனரின் கவனம் இல்லாமல் 2011 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 54,914,558 ஆன வட்டி மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடன் உடன்படிக்கையின்படி (எல்ஜீஐஜபி), மூன்று மாதங்களைவிட அதிகமான காலங்கள் தாமதமானதால், தாமதமான காலத்திற்காக தாமதப்பட்ட தொகையில் 2 % மேலதிக வட்டி செலுத்தவேண்டும். எவ்வாறாயினும், கடன் உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளிற்கு முரணாக வட்டிக் கொடுப்பனவுகளிலுள்ள தாமதங்கள் மீது 11 % மேலதிக வட்டி சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான ரூபா 14,987,619 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது வரிக்கு முன்னரான ரூபா 49,075,907 ஆன பற்றாக்குறையில் விளைந்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையில் ரூபா 34,088,288 ஆன அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2011 ஆம் ஆண்டிற்காக உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம், நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்திட்டம் மற்றும் பல்லாண்டுப் பயிர் அபிவிருத்திச் செயற்திட்டம் என்பன தொடர்பில் முறையே ரூபா 42,576,812, ரூபா 17,792,989 மற்றும் ரூபா 834,819 ஆன பற்றாக்குறை மேற்குறிப்பிட்ட பற்றாக்குறையிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்யை ஆண்டுகளிற்கான நிதிசார் விளைவுகளின் பொழிப்பு பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| | திசெம்பர் 31 இல் உளளவாறு | | |
|---|---|---|---|
| | 2011 | 2010 | முரண் |
| | ரூபா | ரூபா | % |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி வருமானம் | 246,790,845 | 227,053,363 | 9 |
| திறைசேரிக் கடன்கள் மீதான வட்டிச் செலவினம் | (164,019,863) | (157,702,050) | 4 |
| செயற்பாட்டு மிகைகள் | 82,770,982 | 69,351,313 | 19 |
| முதலீட்டு வருமானம் | 6,297,567 | 5,934,506 | 6 |
| ஏனைய வருமானம் | 2,371,573 | 166,357 | 1326 |
| நிர்வாகச் செலவினம் | (15,542,869) | (14,297,694) | 9 |

| | | | |
|---|---|---|---|
| மொத்த மிகைகள் | 75,897,253 | 61,154,481 | 24 |
| தேறிய திரண்ட மானியம் | (121,674,545) | (65,868,283) | 85 |
| செலுத்திய வருமான வரி | (1,298,615) | (4,623,817) | -72 |
| ஆண்டிற்கான ஒட்டு மொத்த பற்றாக்குறை | (47,075,907) | (9,337,619) | 404 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | (2,000,000) | (5,650,000) | -65 |
| வரிக்கான ஏற்பாட்டின் பின்னரான பற்றாக்குறை | (49,075,907) | (14,987,619) | 227 |

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

கடந்த முன்னைய நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் கீழே தரப்படுகின்றன.

| | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|
| | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) |
| மொத்த வருமானம் | 255,460 | 233,776 | 191,869 | 164,204 | 167,355 |
| மொத்தச் செலவினம் | (179,563) | (172,622) | (169,830) | (158,169) | (121,378) |
| மொத்த மிகைகள் | 75,897 | 61,154 | 22,039 | 6,035 | 45,977 |
| திரண்ட நிதியத்திற்கான கொடுப்பனவு | - | - | (5,000) | (3,000) | (3,000) |
| நட்டக் கடனுக்கான ஏற்பாடு | - | - | - | (12,000) | (26,542) |
| தேறிய திரட்டிய மானியம் | (121,674) | (65,868) | (30,985) | - | - |
| செலுத்திய வருமான வரி | (1,299) | (4,624) | (11,274) | - | - |
| தேறிய மிகை /(பற்றாக்குறை) | (47,076) | (9,338) | (25,225) | 89,965 | (16,434) |
| வருமான வரிக்கான ஏற்பாடு | (2,000) | (5,650) | (6,500) | (10,127) | (500) |
| வரி ஏற்பாட்டிற்கு பின்னரான தேறிய மிகை /(பற்றாக்குறை) | (49,076) | (14,988) | (31,725) | (19,092) | 15,934 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007-2011 வரையான காலத்தின் போது ரூபா 167.3 மில்லியன் முதல் ரூபா 255.4 மில்லியன் வரை அல்லது 52.65 சதவீதம் வரை மொத்த வருமானம் அதிகரித்திருந்ததுடன் மொத்தச் செலவினம் அதே காலப்பகுதியின் போது ரூபா

121.3 மில்லியன் முதல் ரூபா 179.5 மில்லியன் அல்லது 47.98 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(ஆ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டத்தின் (எல்ஜீஐஐபி) தேறிய திரண்ட மானியம் 2009 முதல் 2011 வரையான காலத்தின் போது ரூபா 30.98 மில்லியன் முதல் ரூபா 121.67 மில்லியன் அல்லது 292.74 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(இ) வரி ஏற்பாட்டின் பின்னரான பற்றாக்குறை 2008 முதல் 2011 வரையான காலத்தின் போது ரூபா 19.09 மில்லியன் முதல் ரூபா 49.07 மில்லியன் அல்லது 157.04 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வருமான நோக்க செயற்திட்டங்கள் மற்றும் வருமான நோக்கமற்ற செயற்திட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றத்திற்காக தள்ளுபடிசெய்யும் வட்டி வீதங்களின் கீழ் கடன்கள் வழங்குவதே நிதியத்தின் பிரதான செயற்பாடாக உள்ளது. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட பல்லாண்டுப் பயிர் அபிவிருத்தி செயற்திட்டம், நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டம் மற்றும் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் என்பவற்றின் கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி அறவீட்டின் முகாமைத்துவமும் நிதியத்தின் செயற்பாடுகளாக உள்ளன.

#### 3.1.1 கடன் நிர்வாகம்

(அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் (எல்ஜீஐஐபி)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் கடன் இல 2201 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) இன் அமுலாக்கலிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் செயற்திட்ட உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திட்டிருந்ததுடன் உப செயற்திட்டங்களின் அமுலாக்கல் மற்றும் மேற்பார்வைக்கான முழு பொறுப்பினையும் கையேற்றிருந்தது. செயற்திட்டக் காலம் அடுத்த ஆண்டில் நிறுத்தப்பட வேண்டும் எனினும் அங்கீகரித்த செயற்திட்டக் கிரயமான ரூபா 5,955 மில்லியன் கிரயத்தில், 2011 திசெம்பர் 31 வரை ரூபா 3,382 மில்லியன் அல்லது 56.79 சதவீதம் மாத்திரமே பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

ii. இந்தச் செயற்திட்டத்தின் கீழ், உள்ளூராட்சி அதிகாரசபைகள் மானியமொன்றினை பெறுவதற்கும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (எல்ஏ) வகுதிகளில் தங்கியிருக்கின்ற கடன் கூறு தகுதியுடையதாக

இருந்தது. உள்ளூராட்சி அதிகாரசபைகள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,343,983,387 மற்றும் ரூபா 2,079,781,901 கூட்டு மொத்தத் தொகையான முறையே கடன்கள் மானியங்களை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், ஆசிய அபிவிருத்தி வங்கியானது உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு கடனாக ரூபா 2,589,283,200 வழங்கியிருந்தது. அதன்பின்னர், வருடாந்தம் 1 % மற்றும் வருடாந்தம் 1.5 % வட்டி வீதத்தில் 8 ஆண்டுகள் சலுகைக் காலத்துடன் 32 ஆண்டுகளிற்குள் மீளச் செலுத்தவேண்டியுள்ளது. உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு வழங்கப்பட்ட கடன்களில் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தால் 9 % வட்டி வீதம் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது. ரூபா 108,738,150 தொகையான மொத்த பெறவேண்டிய வட்டியில் ரூபா 36,748,199 ஆன தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் படி ரூபா 45,678,980 தொகையான நிலுவையாக இருக்கின்ற கடன் தவணைப்பணங்களில் ரூபா 13,811,090 தொகை 90 நாட்களிற்கு அதிகமாக நிலுவையாக இருக்கின்றன.

iii. மீளாய்வாண்டின் போது வருமானக் கூற்றிற்கு ரூபா 121,674,545 ஆன தேறிய திரண்ட மானியம் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. அதேநேரம் மானியத்தில் பெருமளவானது நிதியத்தால் எல்லை வட்டி வீதத்தில் முகாமை செய்ய வேண்டியிருந்தது. ஆகையால், நிதிய முகாமைத்துவம் எதிர்காலத்தில் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்காக மிகவும் ஆபத்தாக உள்ளது.

iv. இலங்கை சனநாயக சோசலீச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திட்ட 2006 சனவரி 19 ஆந்திகதிய 2201 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின்படி, உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆக்கக் கூறு ‘‘பீ’’ இன் அமுலாக்கல் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக அமுலாக்கல் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு ஐ.அ.டொலர் 42.6 மில்லியன் (ரூபா 4,260 மில்லியன்) தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்திற்கு ரூபா 2,181 மில்லியன் விடுவிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,321 மில்லியன் மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டத்தின் (யூடிஎல்ஐஎச்பி) செயலாற்றல்

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் (எல்எல்&டிபி) திறைசேரிக்கான அறவீட்டு முகவரொன்றாக, நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டத்தால் (யூடிஐஎச்பி) வழங்கப்பட்ட ரூபா 2,270,125,714 தொகையான கடனை அறவிடுவதற்கு பொறுப்பேற்றிருந்தது. அந்தக் கடன்கள் சமமான தவணைகளில் 5.25 % வட்டி வீதத்தில் 25 ஆண்டுகளிற்குள் திறைசேரிக்கு திருப்பிச் செலுத்த வேண்டியுள்ள அதேநேரம் 8 % மற்றும் 10 % வட்டி வீதத்தில் 64 முதல் 40 காலாண்டு தவணைகள் மூலம் உள்ளூராட்சி அதிகாரசபைகளிடமிருந்து அறவீடு செய்யப்பட்டுள்ளது. 2011 திசெம்பர் 31 உள்ளவாறு வழங்கப்பட்ட ரூபா 1,877,436,727 கூட்டு மொத்தத் தொகையான 106 கடன்களில், 2011 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 469,972,626 கூட்டுமொத்தத் தொகையான 19 கடன்கள் மூலம் எந்தவொரு தனியான மூலதன தவணைப்பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. 31 கடன்களிலிருந்து ரூபா 64,893,552 தொகையான பெறவேண்டிய வட்டி மீளாய்வாண்டின் போது தொங்கல் வட்டியாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2005 முதல் 2011 வரையான காலத்திற்காக தொங்கல் கணக்கில் திரண்ட வட்டி ரூபா 367,966,712 ஆகும். அந்த நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அக்கணக்குகளில் போதிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்லாண்டுப் பயிர் அபிவிருத்திச் செயற்திட்டம் (பிசீடிபி)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்லாண்டுப் பயிர் அபிவிருத்திச் செயற்திட்டத்தால் (பிசீடிபி) உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு வழங்கப்பட்ட கடன்களில் முறையே மூலதனம் மற்றும் பெறவேண்டிய வட்டி என்பவற்றினை பிரதிநிதித்துவப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் ரூபா 72,001,574 மற்றும் ரூபா 31,195,292 ஆன தொகைகள் காட்டப்பட்டிருந்தது. 1995 இல் வழங்கப்பட்ட ரூபா 12 மில்லியன் கடனில் எல்லா தம்புள்ள பிரதேச சபையாலும் எவ்வித தவணைப்பணங்களும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 1995 இல் கண்டி நகர சபைக்கு விடுவிக்கப்பட்ட ரூபா 60,922,475 தொகையான ஆரம்ப கடனில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 59,781,574 ஆன தொகை தீர்க்கப்படாது இருந்தது.

(ஈ) கடன்கள் வழங்குதல் (எல்எல்டிஎவ்)

நிதியமானது மீளாய்வாண்டின் போது பல்வேறு செயற்திட்டங்களிற்கு கடன்கள் வழங்கப்படுவதற்காக ரூபா 175 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 105.5 மில்லியன் தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 6 செயற்திட்டங்களிற்காக ரூபா 35 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா 75 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 40 மில்லியன் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 4 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் அலுவலக கட்டிடம், நூலகங்கள் மற்றும் ஞாபகாரத்த மண்டபங்கள் என்பன நிர்மாணிப்பதற்கு கடன்கள் வழங்குவதற்காக ரூபா 20 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 92,000 தொகை அல்லது 0.46 சதவீதம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு செயற்திட்டம் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(iii) வாரச் சந்கைள் மற்றும் பொருளாதார நிலையங்களை நிர்மாணிப்பதற்கு 3 செயற்திட்டங்களிற்காக ரூபா 25 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இதில், ரூபா 9.57 மில்லியன் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 4 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(iv) மயானங்களை நிர்மாணிப்பதற்கு 5 செயற்திட்டங்களிற்காக ரூபா 25 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இதில், ரூபா 14.33 மில்லியன் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது ஒரு செயற்திட்டம் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(v) வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 2 செயற்திட்டங்களிற்காக ரூபா 15 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இதில், ரூபா 6.7 மில்லியன் பண அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது ஒரு செயற்திட்டம் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(vi) பொதுச்சந்தை, கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்ட அமுலாக்கல், 5 நீர் வழங்கல் திட்டங்கள், 50 மோட்டார்சைக்கிள் கொள்வனவு மற்றும் ஏனைய வருமானம் உழைக்கின்ற செயற்திட்டங்கள் அமுலாக்கல் என்பவற்றிற்கு 3 செயற்திட்டங்களிற்காக ரூபா 5.5 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த

செயற்திட்டங்களிற்காக எந்தவொரு கடன் கொடுப்பனவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலுவையாகவிருக்கின்ற கடன் தவணைப்பணங்களின் அறவீடு (எல்எல்டிபஎவ்)

2011 சனவரி 01 இல் உள்ளவாறு உள்ளூராட்சி அதிகாரசபைகளிடமிருந்து பெறவேண்டிய ரூபா 26.5 மில்லியன் தொகையான கடன் தவணைப் பணங்களில், ரூபா 13.58 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| **உள்ளூராட்சி அதிகாரசபைகள்** | **2011 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற கடன் தவணைப்பணங்கள்** | **2011 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட அறவீடுகள்** | **அறவீட்டின் சதவீதம்** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| மா நகரசபைகள் | 1,706,882 | 1,706,882 | 100 |
| நகர சபைகள் | 11,736,158 | 2,162,393 | 18.42 |
| பிரதேச சபைகள் | 13,041,864 | 9,348,112 | 71.67 |
| மொத்தம் | 26,484,904 | 13,217,387 | 50.0 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2011 சனவரி 01 இல் உள்ளவாறு நகர சபைகளிடமிருந்து நிலுவையாகவிருக்கின்ற கடன் தவணைப்பணங்களின் அறவீடு 18.42 சதவீதமாக மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தது, பிரதேச சபைகளிடமிருந்து அறவீடுகளின் சதவீதம் 71.67 சதவீதமாக இருந்தது. ஆதலால், ஒட்டு மொத்த கடன் அறவீட்டு சதவீதம் 50 சதவீதமாக இருந்தமையைக் குறிக்கின்றது.

(i) பாணந்துறை மற்றும் வல்வெட்டித்துறை நகர சபைகளிற்கு வழங்கப்பட்ட முறையே ரூபா 7,850,000 மற்றும் ரூபா 2,012,000 தொகையான கடன்களில், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 4,850,000 மற்றும் ரூபா 1,888,755 ஆன தொகைகள் நிலுவையாகவும் காணப்பட்டன.

(ii) கிங்குரன வாரச் சந்தை அபிவிருத்திக்காக 2003 ஆம் ஆண்டில் தமன பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 1,150,000 தொகையான கடனில், ரூபா 40,537 ஆன தவணைப்பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன்பின்னர் எவ்வித தவணைப்பணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 1983 ஆம் ஆண்டில் கரைச்சி பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 855,000 தொகையான கடனில், 1999 ஆம் ஆண்டு வரை ரூபா 11,285 தொகையான தவணைப்பணமும் ரூபா 486,677 தொகையான வட்டியும் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன.

(iv) 1982 ஆம் ஆண்டில் வெலிகம பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 940,000 தொகையான கடனில், ரூபா 376,000 தொகையான தவணைப்பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(v) 1986 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் மெதகம பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 1,791,500 தொகையான கடனில், ரூபா 331,927 தொகையான தவணைப்பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(vi) உள்ளூராட்சி அதிகாரசபைகளிடமிருந்து நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புச் செயற்திட்டம் மற்றும் பல்லாண்டுப் பயிர் அபிவிருத்தி செயற்திட்டம் என்பவற்றால் வழங்கப்பட்ட முறையே ரூபா 469,972,626 மற்றும் ரூபா 12,000,000 தொகையான கடன்கள் தொடர்பில் எந்தவொரு தவணைப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிலுவையாகவிருக்கின்ற கடன் வட்டிகளின் அறவீடு (எல்எல்டிஎவ்)

2011 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற ரூபா 18.47 மில்லியன் தொகையான கடன் வட்டியில் மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட அறவீடுகள் பின்வருமாறு உள்ளன.

| உள்ளூராட்சி அதிகாரசபைகள் | 2011 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையாக இருக்கின்ற வட்டி | 2011 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட அறவீடுகள் | அறவீட்டின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| மா நகரசபைகள் | 643,806 | 643,806 | 100.00 |
| நகர சபைகள் | 11,024,597 | 954,496 | 8.65 |
| பிரதேச சபைகள் | 6,806,371 | 2,699,683 | 39.66 |
| மொத்தம் | 18,474,774 | 4,297,985 | 23.26 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் தொடர்பில் மீளாய்வாண்டின் போதான அறவீட்டு நிலைமை முறையே 8.65 சதவீதம் மற்றும் 39.66 சதவீதமாக குறைந்த மட்டத்தில் இருந்தது. மாநகர சபைகளிடமிருந்தான கடன் வட்டி அறவீடுகள் 100 சதவீதமாக இருந்தது. ஆதலால் ஒட்டு

மொத்த கடன்வட்டி அறவீட்டு சதவீதம் 23.26 சதவீதம் மாத்திரமேயாக இருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டிற்காக உள்ளூராட்சி அதிகாரசபைகளிடமிருந்து ரூபா 50,124,087 தொகையான கடன்வட்டி அறவீடுகளில், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 44,705,330 அல்லது 89.2 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(iii) 2011 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட நிலுவையாக இருக்கின்ற கடன் வட்டி, 2011 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 18.4 மில்லியன் மொத்த நிலுவையாக இருக்கின்ற வட்டியில் ரூபா 4.2 மில்லியனாகும்.

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாக இருக்கின்ற கடன் வட்டியின் காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்படுகின்றன.

| காலம் | நிலுவையாக இருக்கின்ற கடன் வட்டித் தொகை |
|---|---|
| | ரூபா |
| 5 ஆண்டுகளிற்கு மேல் | 10,089,324 |
| 01 ஆண்டிற்கு மேல் 5 ஆண்டுகளிற்கு குறைய | 4,117,899 |
| 1 ஆண்டிற்கு குறைய | 5,408,757 |
| | 19,615,980 |

(iv) பாணந்துறை, அம்பாறை மற்றும் அம்பலாங்கொடை நகர சபைகளிற்கு வழங்கப்பட்ட கடன் தொகைகள் முறையே ரூபா 7,850,000, ரூபா 7,270,000 மற்றும் ரூபா 3,360,000 ஆக இருந்தன. 2011 ஆம் ஆண்டுவரை பெறவேண்டிய கடன் வட்டி முறையே ரூபா 6,356,000, ரூபா 1,323,860 மற்றும் ரூபா 2,378,984 ஆகும்.

(v) பிரதேச சபைகளிற்கு வழங்கப்பட்ட கடன்களில் நிலுவையாக இருக்கின்ற வட்டியின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **பிரதேச சபை** | **வழங்கப்பட்ட கடன் தொகை** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வட்டி** | **நிலுவையாக இருக்கின்ற காலம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| ஹக்மன | 3,000,000 | 1,043,861 | 2005-2011 |
| பேருவல | 9,900,000 | 119,133 | 2011 |
| பெலியத்த | 13,000,000 | 235,941 | 2011 |

| | | | |
|---|---|---|---|
| தமன | 1,950,000 | 298,026 | 2006-2011 |
| எம்பிலிப்பிட்டிய | 10,122,900 | 430,849 | 2008-2011 |
| மெதகம | 1,791,500 | 2,396,770 | 5 ஆண்டு களிற்கு மேல் |

(எ) வட்டி அறவீட்டின் முன்னேற்றம்

2011 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவையாக இருக்கின்ற மொத்தக் கடன் வட்டி மற்றும் மீளாய்வாண்டிற்காக செய்யப்பட்ட அறவீடுகள் என்பன பின்வருமாறு உள்ளன.

(i) உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் (எல்எல்டிஎப்)

| கடன் வகை | 2011 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த வட்டி | 2011 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட வட்டி | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியவை | பெறப்பட்ட வட்டியின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| செயற்பாடற்ற கடன்கள்-எல்எல்டிஎப் | 16,534,087 | இல்லை | 16,534,087 | - |
| பெறவேண்டிய கடன் வட்டி (நடைமுறையற்ற) | 18,516,750 | 4,199,398 | 14,317,351 | 22.68 |
| பெறவேண்டிய கடன் வட்டி (நடைமுறை) | 49,997,708 | 44,588,951 | 5,408,757 | 89.18 |
| மொத்தம் | 85,048,545 | 48,788,349 | 36,260,195 | 57.37 |

(ii) நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புச் செயற்திட்டம் (யூடிஎல்ஜஎச்பி)

| கடன் வகை | அறவிட வேண்டிய மொத்த வட்டி | பெற்ற வட்டி | பெற வேண்டியவை | பெறப்பட்ட வட்டியின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2011 சனவரி 01 இல் உள்ளவாறு | 2011 | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| செயற்பாடற்ற கடன்கள்-யூடிஎல்ஜஎச்பி | 372,251,500 | 4,284,787 | 367,966,712 | 1.15 |
| பெறவேண்டிய கடன் வட்டி | 22,542,923 | 1,796,982 | 20,745,941 | 7.97 |

| | | | | |
|---|---|---|---|---|
| (நடைமுறையற்ற) | | | | |
| பெறவேண்டிய கடன் வட்டி (நடைமுறை) | 91,458,641 | 76,145,884 | 15,312,757 | 83.26 |
| மொத்தம் | 486,253,064 | 82,227,653 | 404,025,410 | 16.91 |

(iii) பல்லாண்டுப் பயிர் அபிவிருத்திச் செயற்திட்டம் (பீசீடிபி)

| கடன் வகை | அறவிட வேண்டிய மொத்த வட்டி | பெற்ற வட்டி | அறவிட வேண்டியவை | பெறப்பட்ட வட்டியின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2011 சனவரி 01 இல் உள்ளவாறு | 2011 | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| செயற்பாடற்ற கடன்கள்- பீசீடீபீ | 24,928,137.93 | 2,194,818.48 | 22,733,319.45 | 8.80 |
| பெறவேண்டிய கடன் வட்டி பீசீடீபீ (நடைமுறையற்ற) பீசீடீபீ லிருந்து | 8,461,973.78 | 0 | 8,461,973.78 | 0 |
| பெறவேண்டிய வட்டி (நடைமுறை) | 5,463,842.46 | 5,457,242.46 | 6,600.00 | 99.88 |
| மொத்தம் | 38,853,954.17 | 7,652,060.94 | 31,201,893.23 | 19.69 |

கடன் மூலதனம் மற்றும் வட்டியின் நீண்டகாலம் பெறவேண்டியவைகள் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் வட்டி மாத்திரம் வட்டித் தொங்கல் கணக்கில் அட்டுறுவாக உள்ளது. மூலதனம் நிலுவைகளின் உண்மைப் பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வட்டி தொங்கல் பெருமளவு பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டுகளில் கடன்கள் மீளமைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2011 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 413,713,725 தொகையான பெறவேண்டிய தொங்கலிலுள்ள மொத்த வட்டியில், மீளாய்வாண்டின் போது ரூபா 6,479,605 அல்லது 1.57 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஏ) மொத்தக் கடன்கள், செயற்பாடற்ற கடன்கள் மற்றும் என்பிஎல் விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளிற்கான மொத்த நிலுவையாக இருக்கின்ற கடன்கள், செயற்பாடற்ற கடன்கள் மற்றும் என்பிஎல் விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| நிறுவனம்/ செயற்திட்டம் | 2011 | | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவையாக இருக்கின்ற மூலதனம் | செயற்பாடற்ற கடன்கள் | என்பிஎல் | நிலுவையாக இருக்கின்ற மூலதனம் | செயற்பாடற்ற கடன்கள் | என்பிஎல் | நிலுவையாக இருக்கின்ற மூலதனம் | செயற்பாடற்ற கடன்கள் | என்பிஎல் |
| | ரூபா மில் | ரூபா மில் | % | ரூபா மில் | ரூபா மில் | % | ரூபா மில் | ரூபா மில் | % |
| எல்எல்&டிஎவ் | 567.89 | 14.24 | 2.5 | 594.79 | 14.24 | 2.4 | 587.80 | 14.24 | 2.4 |
| யூடிஎல்ஐஎச்பி | 1,877.44 | 878.06 | 46.7 | 1,950.57 | 882.89 | 45.2 | 2,013.19 | 884.46 | 43.9 |
| பிசீடிபி | 72.00 | 71.78 | 99.6 | 73.15 | 72.92 | 99.7 | 73.28 | 72.92 | 99 |
| மொத்தம் | 2,517.33 | 964.08 | 38.3 | 2,618.51 | 970.05 | 37.0 | 2,674.27 | 971.62 | 36.3 |

சகல மூன்று கடன் திட்டங்கள் தொடர்பில் 2009 - 2011 வரையான காலத்தின் போது செயற்பாடற்ற கடன் சதவீதம் அதிகரித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

2011 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சுழற்சி நிதியத்தின் கடன் தவணைப் பணம் மற்றும் அறவீடுகள் என்பன பின்வருமாறுள்ளன.

| | ரூபா |
|---|---:|
| மொத்த கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி அறவீடுகள் | 418,212,437 |
| கழி: திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட மொத்த முதல் மற்றும் வட்டி | (199,115,262) |
| நிதிகளின் மீதி | 219,097,175 |
| விடுவிக்கப்பட்ட கடன் | (105,707,000) |
| மிகை நிதிகள் | 113,390,175 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிய நோக்கு உள்ளூர் மட்ட உட்கட்டமைப்பு நிதியளிப்பிற்காக நிதி நிறுவனங்களில் முன்னணியில் இருக்க வேண்டுமென்பதாகும். ஆதலால் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் அடிப்படை உட்கட்டமைப்பு சேவைகளிற்காக உள்ளூராட்சி அதிகார சபைகளிற்கு நீண்ட கால நிதியளிப்பு வழங்குவதற்கு இருந்தது. உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் ரூபா 418.2 மில்லியன் மொத்த மூலதனம் மற்றும் வட்டி உழைத்திருந்ததுடன் திறைசேரிக்கு ரூபா 199.1 மில்லியன் திருப்பிச் செலுத்தியிருந்தது. பெறப்பட்ட மூலதனம் மற்றும் வட்டியில், மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு ரூபா 105.7 மில்லியன் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பயன்பாட்டிற்காக கணனி மென்பொருளொன்றை விருத்தி செய்வதற்கு தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 847,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு பரிசோதனை திகதியாகிய 2012 மே 21 வரை கூட அந்த மென்பொருள் முறையாக செயற்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(இ) பல்லாண்டு பயிர் அபிவிருத்தி செயற்திட்டத்திடமிருந்து ரூபா 105.29 மில்லியன் தொகையான முன்னைய கடன் தவணைப்பண நிலுவைகள் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்டத்திடமிருந்து

ரூபா 355.15 மில்லியன் மூலதனம் என்பவற்றினைக் கருத்திற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 30 மில்லியன் தொகை கண்டி மாநகர சபைக்கு வழங்கப்பட்டது.

## 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்ட கடன்கள்

கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின்படி, உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்ட கடன்களின் முகாமைத்துவத்தில் பின்வரும் பிரதான நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

2008 ஆம் ஆண்டில் வெள்ள நீர் செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்காக கம்பஹா மாநகர சபைக்கு ரூபா 37,514,097 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2010 ஒக்தோபர் 31 இல் சலுகைக் காலம் காலாவதியாகி இருந்தது. உடன்படிக்கையின்படி, சலுகைக் காலம் காலாவதியாகிய பின்னர் உடனடியாக கடன் தவணைப்பணங்கள் அறவிடப்பட்டிருக்க வேண்டும். நிலுவைகளிலுள்ள மொத்த தவணைப்பணங்கள் மற்றும் வட்டி ரூபா 3,855,237 ஆக இருந்த போதிலும் 2012 யூன் 30 வரை நிலுவையாக இருக்கின்ற கடன்களை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிய கடன்கள்

கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின்படி, உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிய கடன்களின் முகாமைத்துவத்தில் பின்வரும் பிரதான நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கடைத்தொகுதி கட்டிட நிர்மாணத்திற்காக பாணந்துறை நகர சபைக்கு ரூபா 7,850,000 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. நகர சபைக்கு கடன்களை வழங்கும் போது போதிய பிணைவைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. மூன்று தடவைகள் நகர சபைக்கு கடன் தவணைப்பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் கூட இந்தக் கடன்கள் முறையான அங்கீகாரம் இல்லாமல் வழங்கப்பட்டிருந்ததென மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டிருந்தார். நகர சபையானது 1995 ஆம் ஆண்டில் பிணைவைப்பாக அந்த சொத்தினை ஈடுவைத்து அதே கடைத்தொகுதியின் நிர்மாணத்திற்காக ரூபா 20

மில்லியன் கூட்டு மொத்தத் தொகை மக்கள் வங்கியிடமிருந்து கடன்களை பெற்றிருந்தது.

(ii) 2005 ஆம் ஆண்டில் ஹிக்கடுவை நகர சபைக்கு இழுவை இயந்திரம் கொள்வனவிற்காக ரூபா 18,214,587 ஆன முன்னைய கடன் நிலுவைகளை கருத்திற் கொள்ளாமல் ரூபா 3.5 மில்லியன் கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. 2009 மார்ச் மாதத்தின் பின்னர் எவவித தவணைப்பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. முன்னைய கடன் நிலுவைகளை கருத்திற் கொள்ளாமல் 2007 முதல் 2009 வரையான காலத்தின் போது ஹிக்கடுவை நகர சபைக்கு ரூபா 4.6 மில்லியன் கடைத்தொகுதியின் நிர்மாணத்திற்காக இன்னொரு கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்ட கடன்கள்

கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின்படி, நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு செயற்திட்ட கடன்களின் முகாமைத்துவத்தில் பின்வரும் பிரதான நலிவுகள் அவதானிக்கப்பட்டன

(i) சீதாவக்கபுர பிரதேச சபை- பஸ்நிலைய மற்றும் நவீன சந்தை கட்டிட தொகுதி நிர்மாணம் (யூடிஎல்ஐஎச்பி)

பஸ்நிலைய மற்றும் நவீன சந்தை கட்டிட தொகுதி நிர்மாணத்திற்காக சீதாவக்கபுர பிரதேச சபைக்கு ரூபா 146,752,738 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடன் 2005 இன் மூன்றாவது காலாண்டிலிருந்து 48 தவணைகளிலிருந்து ரூபா 3,668,818 அறவிடப்பட்டிருக்க வேண்டும். பதிவேடுகளின்படி, 2011 திசெம்பர் 31இல் உள்ளவாறான கடன் மீதி ரூபா 146,006,623 ஆக இருந்ததுடன் வட்டி நிலுவைகள் ரூபா 60,248,441 ஆக இருந்தது. இக்கடன் வழங்கும் போது போதிய பிணை வைப்புக்கள் பெறப்பட்டிருக்காததுடன் கடன் வழங்கும் போது கடன் பத்திரங்களும் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) பதுளை மாநகர சபை- வெலிக்கட சந்தையின் நிர்மாணம் (யூடிஎல்ஐஎச்பி)

பதுளை மாநகர சபையிலுள்ள வெலிக்கட சந்தையின் நிர்மாணத்திற்காக ரூபா 60,191,794.57 தொகை வழங்கப்பட்டிருந்தது. 40 தவணைகளில் இக்கடனை அறவிடுவதற்கு உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து செயற்திட்டப் பணிப்பாளர் வேண்டுகை விடுக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், மதிப்பீடு, திட்டம் மற்றும்

செய்யப்பட்ட வேலை புள்ளிவிபர அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருக்கின்ற கடன் மீதி ரூபா 33,564,401 ஆக இருந்தது. கடன் வழங்கும் போது அறவீட்டு நிலைமை மதிப்பிடப்பட்டிருக்காததுடன் போதிய பிணை வைப்பும் பெறப்பட்டிருக்கவில்லை. நிர்மாணத்தில் குறைபாடுகள் காரணமாக மாநகர சபையானது கடனை திருப்பி செலுத்துவதற்கு தயங்கியிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(iii) பதுளை மாநகர சபை- பதுளை நகரப் பகுதியில் வெள்ள நீர் வடிகாலமைப்பு வலையமைப்பு

---

72 தவணைகளில் அறவிடப்பட வேண்டுமென ரூபா 21,778,551 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2011 ஆகஸ்ட் 30 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் ரூபா 10,572,703 ஆக இருந்தது. நிலுவையாக இருக்கின்ற கடன்களை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2004 - 2005 வரையான காலத்தின் போது 07 செயற்திட்டங்களிற்காக ரூபா 103,059,368 கூட்டு மொத்தத் தொகையான கடன்கள் பதுளை மாநகர சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2007 ஆம் ஆண்டிலிருந்து திருப்பிச் செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருக்கின்ற கடன்கள் ரூபா 95,682,184 ஆகவும் நிலுவையாக இருக்கின்ற வட்டி ரூபா 56,557,625 ஆகவும் இருந்தது.

(iv) இரத்தினபுரி மாநகர சபை- வீதி முன்னேற்ற செயற்திட்டம் (யூடிஎல்ஐஎச்பி)

---

ரூபா 12,656,450 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2005 இலிருந்து 64 தவணைகளில் அறவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிர்மாண குறைபாடுகள் காரணமாக வீதிகள் சேதமடைந்திருந்தது. மாநகர சபையானது கடன் திருப்பிச் செலுத்தலை நிராகரித்திருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருக்கின்ற மொத்தக் கடன்கள் ரூபா 8,014,764 ஆக இருந்தது.

(v) ஹிக்கடுவ நகர சபை- உப செயற்திட்ட இல 5521- வெள்ள நீர் வடிகாலைமப்பில் முன்னேற்றம் (யூடிஎல்ஐஎச்பி)

ஹிக்கடுவயில் வெள்ள நீர் வடிகாலைமப்பில் முன்னேற்றத்திற்கு ரூபா 16,540,616 தொகையான கடன்கள் வழங்கப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் 30 இல் உள்ளவாறு மொத்த முதல் நிலுவைகள் ரூபா 1,630,766 ஆகவும் அவற்றின் மீதான வட்டி ரூபா 2,973,901 ஆகவும் இருந்தது. கடன் வழங்கத் தொடங்கியதிலிருந்து மூன்று ஆண்டுகளின் பின்னர், கடன் திருப்பிச் செலுத்தல்கள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் கடனை அறவிடுவதற்கு உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அம்பலாங்கொட நகர சபை- வெள்ள நீர் வடிகாலமைப்பு முன்னேற்றச் செயற்திட்டம் (யூடிஎல்ஐஎச்பி)

2005 ஆம் ஆண்டில் வெள்ள நீர் வடிகாலமைப்பு முன்னேற்றச் செயற்திட்ட நிர்மாணத்திற்கு ரூபா 12,142,439 ஆன கடன் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த கடனின் முதல் பகுதியின் நிலுவை ரூபா 928,436 ஆகவம் வட்டி நிலுவை ரூபா 5,541,684 ஆகவும் இருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் நகர சபைக்கும் மாற்றப்பட்டிருக்கவில்லை. நிலுவையிலுள்ள தவணைப்பணம் ரூபா 1,774,165 ஆக இருந்தது. கடனை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) பலாங்கொடை நகர சபை- பஸ் தரிப்பிட மற்றும் நகர நிர்மாணம் (யூடிஎல்ஐஎச்பி)

ரூபா 111,209,828 தொகையான வழங்கப்பட்ட கடனில், 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருக்கின்ற கடன் மீதி ரூபா 58,135,245 ஆக இருந்தது. பதிவேடுகளின் படி, பஸ் நிலையம் மற்றும் கடைத் கட்டிடத் தொகுதியில் பாரிய நிர்மாண நலிவுகள் அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 20 மில்லியன் பெறுமதியான மின்பொருள் விடயங்கள் களவாடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் நகர சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. கடன் தன்மையை மதிப்பிடாமல் கடன்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் போதிய பிணை வைப்புகளும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இல 899 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) இன் கீழ் பல்லாண்டுப் பயிர் அபிவிருத்தி செயற்திட்டத்தால் உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு வழங்கப்பட்டிருந்தது. உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியமானது அறவீட்டு முகவராக 10 % வட்டி வீதத்தில் திறைசேரிக்கு இக் கடன் மற்றும் வட்டி அறவிட்டு திருப்பி செலுத்த வேண்டும். ஆனால் கண்டி மாநகர சபைக்கு ரூபா 60,922,475 தொகையான வழங்கப்பட்ட கடன் 9 % வட்டி வீதத்தில் திருப்பி செலுத்தப்பட்டிருந்தது. ஆதலால் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் வருடம் ஒன்றிற்கு 1 % நட்டத்தை அடைந்திருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு அங்கீகரித்த பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் இருக்கின்ற வெற்றிடங்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் வகுதி | அங்கீகரித்த பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிட பதவியணி |
|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர் | 1 | 1 | - |
| முகாமையாளர்கள் | 2 | - | 2 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | 2 | 1 | 1 |
| துணை உத்தியோகத்தர்கள் | 25 | 16 | 9 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 8 | 5 | 3 |
| தொழில்நுட்பம் அல்லாதவை | | | |
| ஆரம்ப மட்ட தொழிற்றிறன் | 2 | 1 | 1 |
| ஆரம்ப மட்ட தொழிற்றிறன் அற்றவை | 2 | 1 | 1 |
| மொத்தம் | 42 | 25 | 17 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரித்த பதவியணிக்கு எதிராக 2011 ஆம் ஆண்டில் 17 வெற்றிடங்கள் இருந்ததென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டில் முகாமைத்துவ மட்டத்திலுள்ள இரண்டு வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தன.

(ஆ) ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011- 2013 காலத்திற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மனிதவள முகாமைத்துவ அபிவிருத்தி தொடர்பில் முக்கிய இலக்குகள் சரிசெய்யப்பட்டிருந்த போதிலும் அந்த இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை.

**3.6 பணிக்கொடைக்கான நிதியம்**

2012 ஒக்தோபர் 31 வரை நிதியத்தால் பணிக்கொடை நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை.

## 4. கணக்களிதன்மையும் நல்ல ஆளுகைளும்

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்களை ஆற்றும் நோக்கத்திற்காக உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபித்திருக்க வேண்டும். தொடர்புபட்ட அமைச்சிற்கு உள்ளக கணக்காய்வு பிரிவு இருக்காததால் நிதியத்தால் செய்யப்பட்ட வேலையை மேவுவதற்கு அத்தகைய பிரிவின் வேலையின் நோக்கெல்லை விரிவாக்க முடியும். அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் நிதியத்தின் உள்ளக கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிதி விடயங்கள் தொடர்பான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது, ஆனால் மீளாய்வாண்டின் போது எந்தவொரு கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2011 ஆம் ஆண்டிற்காக உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படும் போது குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது பல்லாண்டு பயிர் அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டம் என்பவற்றிற்காக கணக்காய்விற்கு பாதீடுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் பாதீடானது நல்ல ஆளுகையின் பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## 5. முறைமைகள் மற்றுடும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக்காலம் நிதியத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலுவையாக இருக்கின்ற கடன்கள் மற்றும் வட்டிகளின் அறவீடு

(ஆ) கடன் பகிர்ந்தளிப்புகள்

(இ) கணக்கீடு

(ஈ) தகவல் முறைமை